1981 ஏப்ரல் 6]

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே பெண்களை ஜாமீனில் விட்டிருப்பதாகவும், மற்றவர்களைச் சிறையிலே வைத்திருப்பதாகவும் சொன்னார்கள். அது மட்டுமல்ல. அமைச்சர் அவர்கள் தந்த அறிக்கையிலும், எனக்குக் கிடைத்த தகவலிலும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. இது சம்பந்தமாக எந்தவிதமான பாரபட்சமும் இல்லாமல், போலீஸ் அதிகாரி இல்லாமல், வேறு ஒரு அதிகாரியை வைத்து விசாரித்து, நடவடிக்கை எடுப்பதோடு, கைது செய்யப்பட்டவர்கள் அனைவரையும் விடுதலை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதுபற்றி இப்போது சொல்வதற்கில்லை. நிலைமைகளை விசாரித்து, தக்க முடிவை அரசு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகின்றது.

3. அறிவிப்புகள்.

(அ) பேரவையின் அலுவல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 4ஆம் நாளன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் பேரவையின் நிகழ்ச்சி நிரலில் கீழ்க்கண்ட மாற்றங்கள் செய்யப்பெற வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது :—

(1) 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16ஆம் நாளன்று எடுத்துக்கொள்வதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த மானிய கோரிக்கைகளுக்குப் பதிலாக அன்று (16—4—1981) 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும்; 27—கதர்த் தொழில்; 37—பொதுப் பணிகள்—கட்டிடங்கள்?. 38—பொதுப்பணிகள்—பணியாளர்

அமைப்பும், கருவிகளும், தளவாடங்களும்; 51-பொதுப்பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பெறும்.

ஏற்கனவே 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16ஆம் நாள் அன்று எடுத்துக் கொள்வதாக அறிவிக்கப்பட்ட மானியக் கோரிக்கைகள் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்: 11—மாவட்ட நிர்வாகம். 1981ஆம் ஆண்டு மேத் திங்கள் 8ஆம் நாளன்று எடுத்துக் கொள்ளப் பெறும்.

(2) 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18ம் நாள் மற்றும் 20ஆம் நாள் ஆகிய நாட்களில் எடுத்து கொள்வதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த 15—காவல் துறை 16—தீயணைப்புப் பணிகள் ஆகிய மானியக் கோரிக்கைகள், 1981ஆம் ஆண்டு மே திங்கள் 5-ஆம் நாள் மற்றும் 6ஆம் நாள் ஆகிய நாட்களில் எடுத்துக் கொள்ளப்பெறும்.

(முற்பகல் 10–30)

1981ஆம் ஆண்டு மேத் திங்கள் 5ஆம் நாள் மற்றும் 6ஆம் நாள் ஆகிய நாட்களில் எடுத்துக் கொள்வதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்து 20—வேளாண்மை; 48—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகள், 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10ஆம் நாள் மற்றும் 20ஆம் நாள் அன்று எடுத்துக் கொள்ளப் பெறும்.

(3) 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6ஆம் நாளன்று தமிழ்நாடு மதுவிலக்கு பற்றிய சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்று, 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10-ஆம் நாளன்று அச்சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறும்.

1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10ஆம் நாளன்று எடுத்துக் கொள்வதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த 2—மாநில ஆயத்தீர்வுத் துறை; 4—பொது விற்பனை வரியும், —ஏனை

1981 ஏப்ரல் 6] [பேரவைத் தலைவர்]

வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் 5—முத்திரை தாள்கள்—நிர்வாகம்; ஆகிய மானியக் கோரிக்கைகள் 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள்30ஆம் நாளன்று ஏற்கனவே எடுத்துக் கொள்வதாக அறிவிக்கப் பட்டிருந்த 13—நீதி நிர்வாகம் 14—சிறைச் சாலைகள் ஆகிய மானியக் கோரிக்கைகளுக்குப் பிறகு எடுத்துக் கொள்ளப் பெறும்.

அன்று வினாக்கள்-விடைகள் நேரம் கிடையாது. தேவைப் படின் அன்று (30–4–1981) பேரவை மாலையில் கூடும்.

மற்ற அலுவல்கள் ஏற்கனவே அறிவித்தபடி நடைபெறும்.

4. அறிக்கை அளித்தல்.

விதி 107 (1)-இன் கீழ் திருத்த அறிக்கை.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, 1981ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 7ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உடுக்குறியிட்ட வினா எண். 225 (பழைய எண் 1454) தொடர்பாக நடைபெற்ற விவாதத்தின் போது, உறுப்பினர் திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்கள் கீழ்க்கண்ட துணை வினாவினைக் கேட்டிருந்தார்—

''இந்திய முந்திரிக் கழகம் விநியோகிக்கிற கச்சா முந்திரியை ஒழுங்காக உபயோகப்படுத்தவில்லை என்று புகார் இருப்பதால் சென்ட்ரல் காஷ்யூ [முந்திரி] கார்ப்பரேஷனிடமிருந்து நேரடியாக முந்திரியை மாநில அரசு பெற்று கேரளா மாநிலத்தில் செய்வது போல ஒரு தனி நிறுவனம் ஏற்படுத்தி அந்த நிறுவனத்தின் வழியாக அந்த முந்திரியை ஆலைகளுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

இதற்கு—

''மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் முந்திரி தொழில் வளர்ச்சி, முந்திரி ஏற்றுமதி இவைகளை நோக்க